**PPSC Circular No:AD/TO/Con.Basis/2025/05**

# கிழக்கு மாகாண திணைக்களங்களுக்கு தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) பதவிக்கான ஒப்பந்த அடிப்படையிலான (முழு நேரக் கடமை) ஆட்சேர்ப்பு.

கிழக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் (நிர்வாகம்) அவர்களின் EP/02/ET08/Gen/2025ஆம் இலக்க 09.09.2025 ஆந் திகதிய கடிதம், மற்றும் கிழக்கு மாகாண கௌரவ ஆளுநர் அவர்களின் G/EPC/C/25/TO ஆம் இலக்க 29.08.2025 ஆந் திகதிய அனுமதிக்கமைவாகவும், கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் 11.09.2025ஆந் திகதிய கூட்டத் தீர்மானத்திற்கு அமைவாகவும் பின்வரும் திணைக்களங்களுக்கு தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) பதவிக்கு ஒப்பந்த அடிப்படையில் (முழு நேரக்கடமை) ஆட்சேர்ப்புச் செய்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இதற்கமைய, இவ்விளம்பரத்தில் குறிப்பிடப்பட்ட சகல தகைமைகளையுடைய விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்க முடியும். தகைமைபெறும் விண்ணப்பதாரிகளுக்கான நேர்முகப் பரீட்சையானது கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகத்தேர்வுச் சபையால் நடாத்தப்படும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதி 2025.10.03ஆகும்.

01. தீர்மானித்துள்ள வெற்றிடங்கள் மற்றும் வெற்றிடம் நிலவும் திணைக்களங்களின் விபரம்.

| இல | அலுவலகம் | ஒப்பந்த அடிப்படையிலான ஆட்சேர்ப்பு செய்யவுள்ள எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | நீர்ப்பாசனத் திணைக்களம் | 04 |
| 02 | கட்டடங்கள் திணைக்களம் | 04 |
| 03 | வீதி அபிவிருத்தித் திணைக்களம் | 03 |
| 04 | உள்ளூராட்சித் திணைக்களம் | 09 |
| 05 | மாகாண கல்வித் திணைக்களம் | 02 |
| 06 | மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம். | 01 |

02. ஒப்பந்த காலப்பகுதி:
நியமனம் செய்யப்படும் திகதியிலிருந்து ஒரு வருட காலப்பகுதி அல்லது இப்பதவிக்கு நிரந்தரமாக ஒருவர் நியமிக்கப்படும் வரை, இவற்றுள் எது முந்தியதோ அக்காலப்பகுதி வரைக்கும் செயல்வலுப்பெறும்.

03. தகைமைகள்
பொதுவான தகைமைகள்:-

I. விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

II. நன்னடத்தை உள்ளவராகவும், உடல் உள ஆரோக்கியம் உள்ளவராகவும் பதவிக்குரிய கடமைகளை மேற்கொள்ளப் போதுமான உடற்தகுதி உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

III. விண்ணப்பதாரி விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் முடிவுத் திகதிக்கு உடன் முன்னரான மூன்று (03) ஆண்டு காலப்பகுதியில் கிழக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாக நிரந்தரமாக வசித்திருத்தல் வேண்டும்.

**குறிப்பு:** கிழக்கு மாகாணத்தில் போதியளவான விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறாத விடத்து ஏனைய மாகாணங்களிலிருந்து கிடைக்கப்றெும் விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் மற்றும் 3 III இல் குறிப்பிடப்பட்ட நிபந்தனையை பூர்த்தி செய்யாத விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் கருத்திற்கொள்ளப்படும்.

04. வயது :- விண்ணப்பதாரி விண்ணப்பத்தை ஏற்கும் இறுதித் திகதி அன்று 22 வருடத்திற்கு குறையாதவராகவும் 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல். அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றவர்கள் விண்ணப்பிக்குமிடத்து உச்ச வயதெல்லை 65 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

05. கல்வித் தகைமைகள் :-

I. கல்விப் பொதுத் தராதர (சாதாரண தர)ப் பரீட்சையில் ஒரே அமர்வில் சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி, விஞ்ஞானம், கணிதம் மற்றும் ஏனைய ஒரு (01) பாடத்தில் திறமைச் சித்திகளுடன் ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன்

II. கல்விப் பொதுத் தராதர (உயர் தர)ப் பரீட்சையில் அனைத்துப் பாடங்களிலும் (பொதுப் பரீட்சை தவிர்ந்த) ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். (பழைய பாடத்திட்டமாயின் ஒரே அமர்வில் ஆகக் குறைந்தது மூன்று (03) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்)

அத்துடன்

05. 1. தொழில்சார் தகைமைகள்:-
மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் நிர்ணயிக்கப்பட்ட தேசிய தொழில் தகைமை (NVQ) மட்டம் 5 அல்லது அதற்கு மேல் பின்வரும் ஏதேனும் ஒன்றில் தகைமை பெற்றிருத்தல்.

I. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றினால் வழங்கப்பட்ட தேசிய தொழில்நுட்பவியல் டிப்ளோமா.

அல்லது

II. தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபையினால் வழங்கப்பட்ட தேசிய பொறியியல் டிப்ளோமா.

அல்லது

III. உயர் கல்வி அமைச்சுடன் இணைக்கப்பட்ட இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தினால் வழங்கப்பட்ட உயர் தேசிய பொறியியல் டிப்ளோமா.

அல்லது

IV. இலங்கை பொறியியலாளர் நிறுவனத்தினால் நடாத்தப்படும் பொறியியல் பரீட்சையின் பாகம் 1 ஐ வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருத்தல்.

அல்லது

V. உயர் கல்வி அமைச்சு மற்றும் மேற்குறிப்பிடப்பட்ட தொழிநுட்பச் சான்றிதழ்களை வழங்கக்கூடிய நிறுவனங்களினால் பரீட்சிக்கப்பட்டு மேற்குறிப்பிடப்பட்ட தொழல்நுட்ப சேவைகள் சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சமமான ஏனைய தொழல்நுட்பவியல் தகைமைகள்

06. சம்பளம்:- அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இல: 03/2018 இல் குறிப்பிடப்பட்ட விதிமுறைகளுக்கமைவாகவும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இல: 10/2025 இல் குறிப்பிடப்பட்ட விதி முறைகளுக்கமைவாகவும் மாதாந்த கொடுப்பனவுகள் தீர்மானிக்கப்படும்.

07. ஆட்சேர்ப்பு முறைமை:-

I. இப்பதவிக்கான ஆட்சேர்ப்பானது, மேற்குறிப்பிட்ட வெற்றிடங்களினை நிரப்பும் நோக்குடன் நடாத்தப்படும் நேர்முகத்தேர்வில் பெறப்படும் புள்ளிகளின் திறமை அடிப்படையில் மேற்கொள்ளப்படும். **நேர்முகத் தேர்வில் புள்ளிகள் வழங்கப்படும் புள்ளித் திட்டமானது கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும் முறையில் அமையும்.**

II. மேற்குறிப்பிடப்பட்ட ஆட்சேர்ப்பு முறைமையில் தேவையானவிடத்து ஏதாவது மாற்றங்கள் செய்வது தொடர்பில் கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் சிபாரிசுக்கமைவாக கிழக்கு மாகாண கௌரவ ஆளுநரினால் தீர்மானிக்கப்படலாம்.

III. நேர்முகத்தேர்வின் அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டவர்களின் இறுதிப் பெயர் பட்டியலானது கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டு அவர்களின் சிபாரிசுடன் கிழக்கு மாகாண கௌரவ ஆளுநரினால் அனுமதிக்கப்படும்.

IV. மேற்குறித்த அடிப்படையில் நியமனம் பெறுவது குறித்த பதவியில் நிரந்தர நியமனம் கோருவதற்குரிய அடிப்படையாக எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது

08. விண்ணப்பிக்கும் முறை

I. தங்கள் முழுமையான விபரம் அடங்கிய (கோரப்பட்ட தகைமைகள் தொடர்பான விபரங்கள் உள்ளடங்கலாக) சுயவிபர விண்ணப்பத்தினை சுயமாகத் தயாரித்து விண்ணப்ப முடிவுத் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு ‘‘செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, கிழக்கு மாகாணம், கன்னியா வீதி, வரோதயநகர், திருகோணமலை. எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

II. விண்ணப்பம் அனுப்பி வைக்கப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் AD/TO/Con.Basis/2025/05 என குறிப்பிடப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதிக்குப் பின்னராக கிடைக்கின்ற விண்ணப்பங்களும், உரிய தகைமைகளை பூர்த்தி செய்யாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

ஐ.லியாகத் அலி,
செயலாளர்,
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு.
2025.09.18